# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 11.09.2025**

**OS. No.26/2023**

**வழக்கு சாட்சி PW.1–கணேசன், த/பெ.துரைச்சாமி**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை செய்யப்படுகிறார் )

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தாவா சொத்தினை கிரையம் வாங்கும் முன்பு இடத்தை அளந்து பார்த்தேனா என்றால் சரிதான் . சர்வே எண் .103/17–ல் மொத்த விஸ்திரணம் 32 செனட் என்றால் சரிதான். அதில் நான் 21 செனட் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். கிரையம் வாங்கிய பிறகுதான் 21 செனட்–ஐ பிரித்து வாங்கினேன். 32 செனட்டிற்கு வடக்கே சாலை உள்ளது என்றால் சரியல்ல , வடக்கே விவசாய நிலம் உள்ளது , யாருடைய நிலம் என்று தெரியாது . கிழக்கு பக்கம் யாருடைய நிலம் என்று தெரியாது . தெற்கு பக்கம் ஆரம்ப பள்ளி ரோடு உள்ளது. மேற்கு பக்கம் பஞ்சாயத்து ரோடு உள்ளது.

தாவா சொத்தினை உசேன் முகமது உயிருடன் இருந்த காலத்தில் கந்தையா என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல . 1ம் பிரதிவாதி O.S.No.209/2008 என்ற வழக்கை எனக்கு கிரையம் கொடுத்த அப்துல் அஜிஷ்க்கு தெரியுமா என்றால் தெரியாது , தாவா சொத்தினை கிரையம் வாங்கிய பிறகுதான் தெரிய வந்தது . எனதடிப்படையில் வழக்கு போட்ட விபரம் தெரியவந்தது என்றால் 2022 ல் நான் பத்திரபதிவு அலுவலகத்தில் வில்லங்க சான்று போட்டுபார்த்தபோது தெரிய வந்தது. என் சொத்தினை வேறு ஒரு நபருக்கு விற்க வேண்டி

நடவடிக்கையின் காரணமாக வில்லங்க சான்று போட்டு பார்த்தபோது மேற்சொன்ன விபரம் தெரிய வந்தது.

மேற்சொன்னபோன்று சொத்தை விற்க முற்பட்டபோது வில்லங்கசான்று போட்டு பார்த்து தெரியவந்தது என்ற விபரத்தினை தாக்கல் செய்துள்ள பிராதிலோ , நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.209/2008 என்ற வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான் . வில்லங்கசான்றிதழ் மூலம் வழக்கு இருந்ததை அறிந்த நான் மேற்சொன்னது குறித்து எனது விற்பனையாளரான அப்துல் அஜிஸ்ஸிடம் நான் கேள்வி எழுப்பினேனா என்றால் கேள்வி எழுப்பினேன். 2022–ல் அப்துல் அஜிஸ்ஸிடம் அசல் வழக்கு 209/2008 வழக்கு குறித்து நான் கேள்வி எழுப்பியபோது மேற்சொன்ன அசல் வழக்கு சம்பந்தமான விபரம் அவருக்கு தெரிய வந்ததா என்றால் தெரியவந்தது , ஆனால் அவர் வழக்கில் வக்காலத்தில் கையொப்பம் போடவில்லை என சொன்னார். மேற்சொன்ன அசல் வழக்கு 209/2008 என்ற வழக்கின் தீர்ப்பினை ரத்து செய்யவேண்டி அப்துல் அஜிஸ் வழக்கு போட்டாரா என்றால் இல்லை , அதற்காகதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதியான சசிகலாவின் தாயார் லட்சுமியம்மாள் வாங்கிய கிரையப்பத்திரத்தில் சர்வே எண்.100/4 என தவறுதலாக என குறிப்பிட்டுள்ளதால் அதனை நிவர்த்தி செய்யும்பொருட்டு அவரின் கிரையதார வாரிசான அப்துல் அஜிஸ் மீது அசல் வழக்கு எண்.209/2008 என்ற வழக்கு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ தாவா சொத்தினை நான் அனுபவம் செய்து வருவதாக எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல . அப்துல் அஜிஸ் அவர்கள் அசல் வழக்கு எண் .308/96 என்ற எண்ணில் பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

வழக்கு தாவா சொத்தினை அப்தும் அஜிஸ்ஸின் தந்தையான முகமது உசேன் 1ம் பிரதிவாதியின் மூதாதையர்களுக்கு கிரையம் கொடுத்தவிட்டபடியால் அப்துல் அஜிஸ் எனக்கு கிரைய கொடுப்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல . அப்துல் அஜிஸ் அசல் வழக்கு 209/2008 என்ற வழக்கில் வக்காலத்தில் கையொப்பம் செய்தாரா இல்லையா என்ற விபரம் நேரடியாக தெரியுமா என்றால் அதுகுறித்த விபரம் தெரியாது. மேற்சொன்ன வழக்கு தொடர்புடைய வக்காலத்தின் கையெழுத்தில் அப்துல் அஜிஸ்ஸின் கையெழுத்தா இல்லையான என என்பது பற்றி நான் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல . அசல் வழக்கு 209/2008 என்ற வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்பதால் என்னால் மேற்சொன்ன வழக்கினை ரத்து செய்யகோரி பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

நான் முறையான நபரிடமிருந்து வழக்கு தாவா சொத்தினை கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல . வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள அப்துல் அஜிஸ்ஸின் கையெழுத்து மோசடியானது என நிரூபிக்கும்பொருட்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல . அசல் வழக்கு 209/2008 வழக்கில் நான் தரப்பினராக இல்லாததால் மேற்படி வழக்கில் கண்ட தீர்ப்பினை ரத்து செய்ய எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.09.11 18:02:54 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.